# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

ந.க. எண் 3213 / 1428 / டி5 / நாள் 15.08.2019

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உபகோவில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு தகரத்தினால் ஆன பந்தல் அமைத்தல் மற்றும் இரும்பு பைப் மற்றும் சவுக்கு கியூ லைன் அமைத்தல் தேர் ஓட்டும் பணி, தேர் ஜோடனை செய்தல் பணி போன்ற பணிகள் செய்ய முன் அனுபவம் உள்ள தகுதி வாய்ந்த பணி செய்பவர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **05.09.2019**ம் தேதி மாலை **4.00** மணி வரை வரவேற்கப்படுகின்றன. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை **4.30** மணிக்கு திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | ஒப்பந்த தொகை ரூ. | பொறுப்புறுதி தொகை ரூ. | ஒப்பந்தப் படிவம் விலை ரூ. |
|---|---|---|---|
| ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உபகோவில்களில் வருடம் முழுவதும் நடைபெறும் திருவிழாக்களுக்கு தகரத்தினால் ஆன பந்தல் அமைத்தல் இரும்பு பைப் மற்றும் சவுக்கு கியூ லைன் அமைத்தல், தேர் ஜோடனை செய்து தேர் ஓட்டிக் கொடுத்தல் தெப்பம் பூட்டி பிரித்தல் போன்ற பணிகள் | **28,79,505** | **27,000** | **6000 + 720 = 6720** |

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் **26.08.2019** முதல் **03.09.2019** தேதி மாலை **5.00** மணி முடிய திருக்கோயில் அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் மேற்படி பணிகள் செய்வதற்கான சாமான்கள் மற்றும் தகுதி வாய்ந்த ஆட்கள் வைத்திருப்பவராகவும், தனது பெயரில் ரூ.10.00 (பத்து லட்சம்) லட்சத்திற்கான சொத்து மதிப்பு சான்றும் நடப்பு தேதியில் வில்லங்க சான்றும் பெற்றிருக்க வேண்டும்.
2. மேற்படி பணிகளுக்கு தேவையான சாமான்களை திருக்கோவிலுக்குள் வைக்கக்கூடாது.
3. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற விண்ணப்பிக்கும்போது தனது பெயரில் ரூபாய் பத்து லட்சத்திற்கான சொத்து மதிப்பு சான்றிதழுடனும், நடப்பு தேதியில் வில்லங்கச் சான்றுடனும் முதுநிலை திருக்கோயிலில் கடந்த ஆண்டு பணிபுரிந்த சான்றுடனும் சாமான்கள் இருக்கும் விவரத்துடனும் விண்ணப்பிக்க வேண்டும்.
4. இதர விவரங்களை அலுவலக நேரங்களில் திருக்கோயில் அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**வேணு ஸ்ரீனிவாசன்,**
அறங்காவலர் குழுத் தலைவர்

**பொ. ஜெயராமன்,**
இணை ஆணையர் / செயல் அலுவலர்

**கே.என். ஸ்ரீனிவாசன்,**
அறங்காவலர்

**கவிதா ஜெகதீசன்,**
அறங்காவலர்

**எஸ்.டி.ரெங்காச்சாரி,**
அறங்காவலர்

**கோ.க.வா.அ. சுதர்சன பிரணதார்த்திஹர ரெங்காச்சார்,**
சுழல்முறை அறங்காவலர்

# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்
## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. **05.09.2019** தேதி மாலை **4.30** மணிவரை ₹.27,000/- வங்கி வரைவோலை (Demand Draft) எடுத்து மூடி முத்திரையிட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுத்தல் வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் எந்த ஒரு இனத்திற்காவது விலை விகிதம் குறிக்காமல் விட்டால் அந்த ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிப்பு செய்யப்படும்.

3. ஒப்பந்தம் எடுக்கும் ஒப்பந்தக்காரர்கள் பணியை குறித்த காலத்திற்குள் முடித்து திருவிழா முடிந்தவுடன் சவுக்கு மற்றும் தகர ஷீட் சாமான்களை உடன் அப்புறப்படுத்த வேண்டும்.

4. ஒவ்வொரு திருவிழா முடிந்தவுடன் சாமான்களை திருக்கோவில் வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தியபின் உடன் பட்டியல் வழங்கப்படும்.

5. டெபாசிட் தொகை செலுத்தாதவர்களும், திருக்கோவிலுக்கு எவ்வகையிலாவது முன்பாக்கி உள்ளவர்களும் மற்றும் திருக்கோவிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்களும் கண்டிப்பாக டெண்டரில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6. திருக்கோவில் நலன் கருதி காரணம் கூறாமல் டெண்டரை ரத்து செய்யவும், டெண்டரை வேறு தேதிக்கு மாற்றம் செய்யவும், இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அதை மறுக்கவோ அல்லது எந்த முறையிலும் பரிகாரம் கோரவும் டெண்டர்தாரருக்கு உரிமையில்லை.

7. டெண்டர் உறுதி ஆகாதவர்கள் டெபாசிட் தொகையை மனு கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

8. டெண்டர் உறுதியான உத்திரவு கிடைத்ததும் டெண்டர்தாரர் தன் பொறுப்பில் ₹.20 (ரூபாய் இருபது மட்டும்) மதிப்புள்ள அரசு முத்திரைத்தாளில் திருக்கோவில் நிர்ணயிக்கின்ற நிபந்தனைகளின்படி எழுதப்பட்ட ஒப்பந்தபத்திரத்தில் கையெழுத்து போட்டுத்தர வேண்டும். பின்னர்தான் வேலையைத் துவக்க வேண்டும்.

9. மேற்படி வேலைகளுக்கு தொகை வழங்கப்படும்போது ஒரு (ஒன்று) சதவிகித வருமானவரி அதன் மீதான உபரிவரி 15 (பதினைந்து) சதவிகிதம் பிடித்தம் செய்யப்படும்.

10. சவுக்கு இரும்பு பைப், தகர ஷீட் சாமான்கள் அனைத்தும் தங்கள் சொந்த இடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். திருக்கோவில் ஆயிரங்கால் மண்டபத்திலோ, திருக்கோவில் வளாகத்திலோ, வைக்க கண்டிப்பாக அனுமதி கிடையாது.

11. திருக்கோவிலில் நடைபெறும் தேர்த் திருவிழாவிற்கு தேர் ஓட்டிக் கொடுக்கும் ஆட்களுக்கு உணவு வகைகள் ஒப்பந்ததாரர்கள் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

12. பணிகள் முடிந்தவுடன் சாமான்களை உடனுக்குடன் அப்புறப்படுத்திய பின்பே பட்டியல் தொகை வழங்கப்படும்.

13. அடுத்த வருட ஒப்பந்தம் உறுதியாகும்வரை இவ்வருட தொகையிலேயே இவ்வருட ஒப்பந்தக்காரர் பணி மேற்கொள்ள வேண்டும்.

இணை ஆணையர் / செயல் அலுவலர்